Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

தனிப்பிரதி ரூ. 5/-
Reg. No. KKI/63/2015-2017

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 63 கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன் சங்.122:1 மார்ச் 2017 No.3

ஒவ்வொரு வேளையிலும் இயேசுவிடம் 'ஆம்' என்போம்

'Yes' to Jesus Every Time

Lois J.Stucky

வில்லியம் பார்டென் தேவனிடம் மிகுந்த பக்தி வைராக்கியமுள்ள பாரம்பரிய பெற்றோருக்கு 1887-ல் பிறந்தார். அவரது தாயார் அவரது இளமைப் பருவத்தில் உத்தம கிறிஸ்தவப் பெண்ணாய் சிக்காகோவிலுள்ள மூடி ஆலயத்தின் அங்கத்தினராய் இருந்தார். அவர்கள் சிக்காகோவில் வாழ்ந்து, வேத புத்தகம் தெளிவாக போதிக்கப்பட்ட அந்த ஆலயத்தில் பிள்ளைகள் ஒழுங்காகப் பங்கெடுக்கச் செய்தார்கள். இங்கு R.A.Torey என்பவர் ஒருமுறை பிரசங்கித்தபோது வில்லியம் தமது 8-வது வயதில் ஆண்டவராகிய இயேசுவை தமது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். அப்போதிலிருந்தே ஆண்டவரை சேவிக்கிற வர்களோடு இணைந்து வாழ்நாள் முழுதும் தேவனை சேவிக்கத் தீர்மானித்தார். இத்தீர்மானத்தை எடுக்கும் போது அவர் இளைஞனாயிருந்தாலும் அதிலிருந்து அவர் ஒருபோதும் பின் வாங்கியதில்லை. வேதவசனத்தின் மீது அவரது அன்பு வளர்ந்த போது வேத வாசிப்பும், ஜெபமும் அவருக்கு ஒவ்வொரு நாளும் முக்கிய இடம் பெற்றன.

உலகம் சுற்றும் பிரயாணம்

பென்சில்வேனியாவிலுள்ள ஒரு கிறிஸ்தவ உயர்நிலைப் பள்ளிக்கு அவரைப் பெற்றோர் அனுப்பினர். ஒரு தேவபயமுள்ள விரிவுரையாளர் கிறிஸ்துவை மாணவர்கள் மாதிரியாகக் கொள்ளும்படியாக விலையேறப் பெற்ற போதனைகளைக் கொடுத்து வழிநடத்தினார். பட்டம் பெற்ற போது அவர் 16 வயது மட்டும் உடையவராயிருந்த படியால் கல்லூரியில் நுழைய முடிய வில்லை. அப்போது அவரது பெற்றோர் அவரை ஒரு நல்ல கிறிஸ்தவ வாலிபரை பிரயாணத் தோழனாகக் கொண்டு உலகம் சுற்றி வர அனுமதித்தனர். அந்நாட்களில் உலகில் காணப்பட்ட ஆவிக்குரிய வீழ்ச்சி, விக்கிரக வணக்கம் போன்றவை அனேகமாகப் பெருகியிருப்பதைக் கண்டு அவர் அதிர்ச்சியடைந்தார். எனவே ஒரு அயல்நாட்டு மிஷனெரி ஆகவேண்டுமென தீர்மானித்தார். தேவன் தமது ராஜ்யம் பரம்ப தம்மை பயன்படுத்தும்படி ஜெபித்தார்.

இருவாலிபரும் லண்டனிலிருந்த போது R.A.Torey என்பவர் ஒரு ஆராதனையில் செய்தி கொடுத்தார். தங்கள் வாழ்வை முற்றிலுமாக ஆண்டவருக்கு அளிக்க விரும்பியவர்களை எழும்பி நிற்கக் கூறியபோது வில்லியமும் எழும்பி நின்று தனது வாழ்வை ஆண்டவருக்கு அர்ப்பணித்ததை உறுதி செய்து கொண்டார். Torey-ன் சவாலை ஏற்றுக் கொண்டு லண்டனிலேயே ஆத்துமாக்களிடம் இயேசுவைக் குறித்துப் பேச ஆரம்பித்தார்.

ஏல் ஞகரில் மாணவராக

சொந்த நாட்டிற்குத் திரும்பிய பின் ஏல் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். வளாகத்திலுள்ள அனைத்து கிறிஸ்தவ செயல்பாடுகளிலும் ஈடுபட்டார். ஒழுங்கான பல்கலைக் கழக ஆராதனைகளில் உதவி செய்வதோடு, சார்லி காம்ப் பெல் என்ற நண்பருடன் இணைந்து ஜெபக் குழு ஒன்றை ஆரம்பித்தார். விரைவில் இன்னும் இருவர் இதில் சேர்ந்து கொண்டனர். காலை உணவுக்கு முன் கூடி ஜெபிப்பது வழக்கம். அந்த இடத்திலுள்ள மாணவர்களையெல்லாம் கிறிஸ்துவுக்குள் கொண்டு வருவதே அவர்களது பாரம். வில்லியம் ஒரு வேத பகுதியை வாசித்து, அதிலுள்ள ஒரு வாக்குத்தத்தத்தைச் சுட்டிக் காண்பிக்க அனைவரும் அதனைப் பெற்றுக் கொள்ள ஜெபித்தனர். இதனைத் தொடர்ந்து பெரிய வகுப்பு மாணவர்களும் ஜெபக் குழுக்களை ஆரம்பித்தனர். தேவன் அவற்றை ஆசீர்வதித்தார். ஜெபத்தைக் கேட்டு அனேக மாணவர்கள் மனந்திரும்பச் செய்தார்.

அவர் தமது நாள் குறிப்பேட்டில், "சுயத்திற்கு 'இல்லை' என்றும் இயேசுவுக்கு 'ஆம்' என்றும் எப்போதும் பதிலளிக்க வேண்டும். இயேசு நமது இருதய சிங்காசனத்தில் வீற்றிருந்தால் நாம் அவர் விரும்பும் இடத்திற்கே செல்லுவோம். அவர் நம்மை எல்லா இடங்களிலும், எல்லாப் பணிகளிலும் மகிமைப்படுத்துவார். . . எனது வாழ்வைப் பொறுத்த மட்டில் என் இருதயத்தினின்று என் கரங்களை எடுத்து விடுகிறேன். நான் உம்மையே என் இருதய சிங்காசனத்தில் அமர்த்துகிறேன். என்னை மாற்றுருவாக்கம் செய்து, பரிசுத்தப் படுத்தி, தமது விருப்பப்படி பயன்படுத்தும். நான் முழு வலிமையையும் தூய ஆவியிடமிருந்து எடுத்துக் கொள்கிறேன், உமக்கு நன்றி" என்று எழுதியிருக்கிறார்.

மிகவும் நல்ல தெய்வீக தாலந்துகளையுடைய வாலிபனாக அவன் காணப்பட்டான். அத்தாலந்துகளை முழுமையடையச் செய்ய அவன் உழைத்தான். உயர் நோக்கங்களைத் தனக்காகக் கொண்டிருந்த அவன் அவற்றிற்காக வாழ்ந்தான். இது அவனது ஆவி உற்சாகமடையவும் அவன் ஈடுபட்ட செயல்பாடுகளின் தரத்தை உயர்த்தவும் ஏதுவாயிருந்தன. அவன் ஜாக்கிரதையுள்ள உக்கிராணக்காரனாக தனது, சமயத்தையும் தனது தந்தையின் வியாபாரத்தையும் கவனித்து வந்தான். கல்வியில் சிறந்தவனாகவும் விளையாட்டுகளில் உற்சாகமாகக் கலந்து கொண்டு தன் உடலை உறுதியான தாயிருக்கும்படி கவனித்துக் கொண்டான். அவன் தனது சகமாணவர்களது மதிப்பையும், புகழையும் பெற்றுக் கொண்டான். அவனது ஒரு நண்பன் "அவன் தன்னோடு சேர்ந்த யாவருக்கும் 'முதுகெலும்பைப்' போன்றவன்" என்று எழுதினான்.

Mrs.Taylor என்ற பெண்மணி அவனைக் குறித்து ஜெபம் என்பது அவனது முக்கிய பணி, அதுவே அவனது மூச்சு என்று ஒரு புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். நண்பர்களோடு சேர்ந்து ஜெபிப்பதோடு ஜெப தேவைகளைக் குறித்த அட்டவணையை பயன்படுத்தி தனியாகவும் ஆழமாகவும் விசாலமாகவும் அவன் ஜெபித்தான்.

பட்டணத்தில் 'Yale Hope Mission' என்ற ஒரு அமைப்பை அவன் நிறுவ பாடுபட்டு ஜெபித்தான். அவன் அதில் அதிக ஈடுபாட்டுடனும் உத்தமத்துடனும் உதவிக்காக வந்தவர்களிடம் பேசுவதும் ஜெபிப்பதும் வழக்கம். அங்கு வந்தவர்கள் உதவி பெற்று நல்ல வாழ்வை அமைத்துக் கொண்ட போது அவன் மகிழ்ச்சியடைந்தான். அவன் ஐசுவரியமுள்ளவனாயிருந்தும் தன்னைத் தாழ்த்தி பிறருக்கு உதவி செய்ய ஆயத்தமாயிருந்தான். தனது ஐசுவரியத்தை கவனமாகவும், ஞானமாகவும் அமைதியாகச் செலவுச் செய்வான்.

அயல்நாட்டு மிஷன்களுக்கு அர்ப்பணிப்பு

மாணவர் தன்னார்வத் தொண்டர்களின் அமைப்பிற்கு ஒரு மிஷனெரி கன்வென்ஷன் நடந்தது. அதில் Samuel Zwemer என்பவர் வில்லியமுக்கு அறிமுகமானார். அவர் கிறிஸ்து மீதும், ஆத்துமாக்கள் மீதும் மிகுந்த வாஞ்சையுடையவர். அவர் இஸ்லாமியரின் எண்ணிக்கை, அவர்களின் அறியாமை ஆகியவற்றை எடுத்துக் கூறி ஒரு சவாலை ஏற்படுத்தினார். மேலும் வாசல் திறந்ததும் மிஷனெரிகள் அவர்கள் பகுதிக்குச்

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955-1999)

முகவரி: வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் 629 001
Mobile: 95432 21008 e.mail:varukayinthoothan@hotmail.com

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வாக்குத்தத்தம்

"கர்த்தர் நித்தமும் உன்னை நடத்துவார்; . . .நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீருற்றைப் போலவும் இருப்பாய்"
ஏசாயா 58:11.

ஆசிரியரின் அன்பு கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதான மும் உண்டாவதாக.

2017-ம் ஆண்டின் மார்ச் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். பவுலுடைய வார்த்தையின்படி, **எனக்குப் பிரியமும் வாஞ்சையுமான சகோ தரரே,** *(சகோதரிகளே)* **எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமான வர்களே, பிரியமானவர்களே,** இந்த ஆண்டின் மார்ச் மாதத்திற் கான ஆசிரியர் கடிதத்தை வழக்கம் போல பெப்ரவரி 5-ம் தியதி ஞாயிறு பகல் வேளையில் ஜெபத்தோடே உங்களுக்கு எழுத ஆரம்பிக்கிறேன் பிலிப்பியர் *4:1.*

". . . . நான் என் தாயின் வயிற்றிலிருந்தது முதல், என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்", *(கலாத்தியர் 1:15)* சுமார் 25 ஆண்டுகளுக்கு மேலாக கன்னியாகுமரியில் அருமை நண்பர் ஒருவரால் நடத்தப்பட்ட உபவாச ஜெபங்களில் அடிமையை கிருபையாய் பயன்படுத்தினார்.

இறுதியாக *2012*-ம் ஆண்டு இதே கன்னியாகுமரியில் 'முதல் வெள்ளிக்கிழமை' நடத்தப்பட்ட உபவாச ஜெபத்திற் குப் பின் தேவனுடைய ஊழியர்களாகிய நாங்கள் கூடி, இவ்வித உபவாச ஜெபங்களை அடுத்த மாவட்டங்களிலும் நடத்த வேண்டுமென்று ஜெபத்தோடு தீர்மானித்தோம்.

நீங்கள் அறிந்திருக்கிறபடி *2013*-ம் ஆண்டு தூத்துக்குடி **இயேசு நம்மோடு சபையிலும்,** *2014*-ம் ஆண்டு பாளையங் கோட்டை **காது கேளாதோர் பள்ளியிலும்,** *2015*-ம் ஆண்டு சிவகாசி **ஷெக்கைனா அசெம்பிளி ஆப் காட் சபையிலும்** தேவனு டைய இரக்கங்களை முன்னிட்டு இவ்வித உபவாச ஜெபங் களை வருடத்திற்கு ஒரு முறை மாத்திரம் நடத்தினோம்.

2016-ம் ஆண்டு மாதந்தோறும் இவ்வித உபவாச ஜெபங்களை நடத்த வேண்டுமென்ற பாரத்தை தேவன் கிருபையாய் அடிமைக்கு தந்த போது, சிலர் நம்ப மறுத்தா லும், எங்களுடைய ஜெபக்குழுவில், கர்த்தர் ஊழியத்தில் அடுத்த கட்டத்திற்கு அழைத்து செல்லுகிறார் என்று விசுவாசித்து அடியானோடே இணைந்து ஜெபிக்கவும், உழைக்கவும் துணிந்தார்கள்.

உங்களுக்குத் தெரியுமா?

1.திருநெல்வேலி, வண்ணார் பேட்டை அசெம்பிளி ஆப் காட் சபையில் நடத்தப்பட்ட நம்முடைய உபவாச ஜெபத் தில் கலந்து கொண்ட காந்தி நகர் C.S.I சபையைச் சார்ந்த ஒரு சகோதரிதான், இந்த வருடம் நவம்பர் மாதம், கர்த்தருக்குச் சித்தமானால் திருநெல்வேலி, காந்தி நகர் C.S.I சபையில் நடைபெற இருக்கும் உபவாச ஜெபத்தை ஒழுங்குச் செய்ய காரணமாயிருந்தார்கள் (வருகையின் தூதன் ஊழியம் சபை பாகுபாடற்றது போல நாம் எழுப்புதலுக்காக ஏறெடுக்கப் படும் உபவாச ஜெபங்களும் சபை பாகுபாடற்றது)

*2. ஏற்கெனவே நமது இரண்டு உபவாச ஜெபங்களில் கலந்து கொண்ட இராஜபாளையம் C.S.I பரிசுத்த யோவான் ஆலயத்தைச் சார்ந்த ஒரு அன்புச் சகோதரர்தான், **இயேசு நம்மோடு திருச்சபை,** இராஜபாளையம் உபவாச ஜெபத்தை ஒழுங்கு செய்து தந்து உதவிச் செய்தார்கள்.*

*3. பாளையங்கோட்டை உபவாச ஜெபத்தில் கலந்து கொண்ட தச்சநல்லூர் C.S.I சபையைச் சார்ந்த ஒரு அன்பு சகோதரர், கர்த்தருடைய சித்தப்படி, ஆண்டவருக்கு மகிமை யாக வெவ்வேறு இடங்களில் **நாம் நடத்தும் எல்லா உபவாச ஜெபங்களிலும்,** எங்களோடே இணைந்து பிரயாணம் பண்ணியோ, தனியாகவோ வந்து பங்கு பெற்று இறுதிவரை இருக்கிறார்.*

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, அப்படி யானால் நீங்கள் ஏன் ஒரு உபவாச ஜெபத்தை ஒழுங்கு செய்யக் கூடாது?

இவ்வித உபவாச ஜெபங்களை ஒழுங்கு செய்து நடத்து வதில் எனக்கு மிகுந்த மனவேதனையும், மன உளைச்சலும் உண்டாவதுண்டு. ஆயினும் **கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது;** *2கொரி.5:14.* ஆதலால்: ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், *(யாக்கோபு 4:15)* ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகை தாமதிக்குமானால் உங்கள் சகோதரன் ஒவ்வொரு மாதமும் தமிழ் நாட்டிலுள்ள வெவ்வேறு இடங்களில் தேவனுடைய வசனத்தைப் பிரசங்கித்து, உபவாசித்து, குழுவினராய் ஜெபித்துக் கொண்டிருப்போம்.

செங்கல்பட்டு உபவாச ஜெபம் முடிந்த பிற்பாடு, கர்த்த ருக்குள் '**எழுப்புதல் ஆரம்பமாகிறது**' (Revival begins) என்று

(8-ம் பக்கம் பார்க்க)

எழுப்புதலுக்காக இதய கதறல் 2017
(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

மாதம்	தேதி	இடம்
ஜனவரி	21-01-2017 3-வது சனி	இயேசு நம்மோடு திருச்சபை சத்திரப்பட்டி ரோடு, ராஜபாளையம்
பிப்ரவரி	18-02-2017 3-வது சனி	C.C.E.F. ஆராதனை ஸ்தலம் ஆற்றூர், சேலம்
மார்ச்	18-03-2017 3-வது சனி	விசுவாசிகளின் ஐக்கிய சபை ஒட்டன் சத்திரம்
ஏப்ரல்	15-04-2017 3-வது சனி	ஏரல் வட்டார எழுப்புதல் ஜெப ஐக்கியம், ஏரல், தூத்துக்குடி
மேய்	20-05-2017 3-வது சனி	புது வாழ்வு எல்லாம் இயேசுவுக்கே திருச்சபை T.R. பட்டினம், காரைக்கால்
ஜூன்	03-06-2017 1-வது சனி	True Life Mission, நாகர்கோவில்
ஜூலை	15-07-2017 3-வது சனி	கன்மலை ஆராதனை சபை, நெல்லிக்குப்பம், கடலூர்
ஆகஸ்ட்	19-08-2017 3-வது சனி	இயேசு நம்மோடு சபை, கருங்கல், குமரி மாவட்டம்
செப்டம்பர்	16-09-2017 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை, மணலி, சென்னை
அக்டோபர்	07-10-2017 1-வது சனி	மாரநாதா ஜெபவீடு, பொள்ளாச்சி
நவம்பர்		காந்தி நகர் C.S.I. சபை திருநெல்வேலி
டிசம்பர்	02-12-2017 1-வது சனி	I.P.C சபை மார்த்தாண்டம்

வருட சந்தா ரூ.100.00

சந்தா, காணிக்கை, கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு, நாகர்கோவில்-629 001.

VARUKAYIN THOOTHAN
Newport Street, Nagercoil-629 001.
Mobile: 95432 21008

வங்கி கணக்கு எண்

VARUKAYIN THOOTHAN
A/c. No.:431521036
Indian Bank,
W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006

வங்கி வழியாக பணம் அனுப்பினால், தொலைபேசி, ஈமெயில், SMS வழியாக எங்களுக்கு தெரிவியுங்கள்.
email :
varukayinthoothan@hotmail.com

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்று தங்கள் ஜீவனைப் பாராது சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்றார். அன்றிலிருந்து அந்த மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்து கர்த்தருக்குச் சித்தமானால் அந்தப் பணியைச் செய்ய ஆவல் கொண்டு அரபி மொழியைக் கற்றார்.

பட்டப் படிப்பு முடிந்ததும் பிரின்ஸ்டன் வேதகலாசாலையில் படிக்கலானார். இங்கும் அவர் சிறந்த பண்டிதராக அறியப்பட்டார். ஆயினும் தனது மார்க்கப் பணிகளையும், குடும்ப வியாபார பணியையும் திறம்பட நடத்தினார். இது தவிர அனேக கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் இவரைத் தங்கள் ஆலோசனை சங்கங்களில் சேவை செய்ய தெரிந்தெடுத்தனர். அவரது ஞானமும், முதிர்ச்சியான தீர்ப்புகளும் அவரது ஆழமான வேத அறிவினால் ஏற்பட்ட படியால் அவர் சேவித்த முதியவர்கள் மத்தியில் அவரை மிகுந்த பயனுள்ள மதிப்புடைய தோழனாக மாற்றின.

1912-ல் சீன உள்நாட்டு மிஷனால் இயக்கத்திற்கு மிஷனெரியாகச் செல்லும் அழைப்பைப் பெற்ற போது அவர் தாம் வடமேற்கு சீனாவுக்கும் செல்லும் தமது விருப்பத்தை பகிரங்கமாக வெளியிட்டார். விரைவில் அவர் மூடி சபையால் அபிஷேகம் செய்யப்பட்டு அயல் நாட்டு மிஷனெரியாக பிரித்தெடுக்கப்பட்டார். அப்போஸ்தலனாகிய பவுலைப்போல கிறிஸ்துவின் அன்பால் நெருக்கி ஏவப்பட்டு தேவன் நடத்துவது போல அவர் ஜீவனைக் கொடுத்த மக்களுக்காக எதையும் செய்யவும், எங்கும் செல்லவும் அவர்துணிந்தார். மிஷனெரியாயிருப்பது ஒரு தியாகமல்ல. அது ஒரு விசேஷித்த வாய்ப்பு என்பது அவரது எண்ணம். கிறிஸ்துவை அறிவதும் அவரை நேசித்து தூய ஆவியால் அவரை சேவிப்பதும் வாழ்வின் முழுமையான அர்த்தம் என்று அவர் எண்ணினார். இத்தகைய கடினமான பகுதிகளுக்கு ஒரு பெண்மணியை அழைத்துச் செல்வது உசிதமல்ல என்பதற்காக அவர் திருமணம் செய்யவில்லை. 'மனிதரால் கூடாதவைகள் தேவனால் கூடும்' என்ற நம்பிக்கையுடன் இந்த சவாலை அவர் ஏற்றுக் கொண்டார் லூக்.18:27.

எல்லாம் இயேசுவுக்காக என்ற வில்லியம்

டிசம்பர் 1912-ல் எகிப்து சென்றார். அங்கு Samuel Zwemer ருடன் இணைந்து இஸ்லாமியத்தையும் அரபி மொழியையும் அதிகமாகக் கற்றார். மிஷனெரிப் பணியின் ஒவ்வொரு பகுதியும் அவருக்கு மிகவும் விருப்பமாயிருந்தது. அவரது கற்றுக் கொள்ளும் ஆவல் அவருக்கு அனேக நண்பர்களைத் தந்தது. விரைவில் பிரசங்கங்களை சிறிய புத்தகவடிவில் அமைத்துக் கொடுத்தார். கைரோவின் தெருக்களில் சம்பாஷிக்க ஆரம்பித்தார். வேத கல்லூரி மாணவர்களின் உதவியுடன் வீடுவீடாகச் சென்று கிறிஸ்தவ துண்டு பிரதிகளை வினியோகிக்க ஒழுங்குகளைச் செய்தார். சுவிசேஷத்தை அறிவிக்க இது அதிக வாய்ப்புகளை ஏற்படுத்தியது.

25 வயது மட்டுமே நிரம்பிய இவர் அதிக மதிப்புடன் கௌரவிக்கப் பட்டார். தெய்வீக அன்பு, விசுவாசம், நம்பிக்கை ஆகியவை அவரில் நிரம்பி வழிந்தன. சைனாவில் அவர் முதல் மிஷனெரி பயணமாகச் சென்ற 4 மாதங்களில் வியாதிப்பட்டு பரலோக அழைப்பைப் பெற்றது அனைவருக்கும் அதிர்ச்சியளித்தது. எதிர்பாராத இந்த மரணத்தால் திரளான மக்கள் கண்ணீர் வடித்தனர். அமெரிக்க செய்தித் தாள்களில் அவரது மரணத்தைக் குறித்தும் அறிவிக்கப்பட்டது. உலகமெங்கு மிருந்து வந்த சாட்சிகளும் அவரது குடும்பத்திற்கு அனுப்பப்பட்டன. வில்லியம் தங்கள் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கம் அவற்றில் எழுதப்பட்டிருந்தன.

1கொரி.6:19-ன்படி நமது வாழ்வு நமக்குச் சொந்தமல்ல. கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தால் மீட்கப்பட்டவர்கள். அவர் நமக்கு அளித்திருக்கும் வரங்கள் கிருபைகள் ஆகியவற்றிற்கு நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் ரோ.14:12. நாம் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை மகிழ்வுடனும் விருப்பத்துடனும் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்ற வேண்டும் ரோமர் 12:1-2. இதற்கு கால அவகாசமும் ஜெபமும் சிந்தனையும் வேண்டும். அவரது பரிபூரண சித்தத்திற்குள் நம்மை அமைக்க சிட்சிக்கும்போது நாம் விலகக் கூடாது எபி.12:5-11. "ஒருவன் என்னைப் பின் பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக் கடவன்" லூக்.9:23 என்று கூறினார். தேவ கிருபை நம் ஒவ்வொருவரையும் தூண்டி தேவ சித்தத்திற்கு நம்மை அர்ப்பணம் செய்யவும் மறு அர்ப்பணம் செய்யவும் உதவி செய்வதாக.

இயேசு கிறிஸ்துவிலுள்ள முழுமையான உறுதியும் நம்பிக்கையும்

Complete confidence and trust in Jesus Christ

Rich Cormicheal

இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சத்தியங்கள்

அவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் மத்.16:16. பிதாவோடு ஒன்றாயிருக்கிறவர் யோவா.10:30. பிதாவை வெளிப்படுத்துகிறவர் யோவா.15:15. பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறவர் கொலோ. 3:1. அவரே வழியும் சத்தியமும் ஜீவனுமானவர். பிதாவினிடத்தில் செல்வதற்கான ஒரே வழி அவரே யோவா14:6.

அவர் ஜீவ அப்பம் யோவா.6:35. நித்திய காலம் வாழ்வதற்கான உணவைத் தருகிறார் யோவா.6:27. அவர் ஆவிக்குரிய கன்மலை 1கொரி.10:4. அவர் திருப்தியளிக்கும் ஜீவ தண்ணீரைக் கொடுக்கிறவர் யோவா.4:14.

அவர் தேவ ஆட்டுக்குட்டி யோவா.1:29. அவரது இரத்தம் விலையேறப் பெற்றது 1பேது.1:19. அது நம்மை நீதிமான்களாக்குகிறது ரோ.5:9. நம்மை மீட்பவர் எபே.1:7. கிருபாதார பலி ரோம.3:26. சமாதானம் கொலோ.1:20. மனசாட்சியை சுத்தமாக்குகிறவர் எபி.9:14. பரிசுத்தம் எபி.13:12. எல்லாப் பாவத்தையும் கழுகி சுத்தப்படுத்துவார் 1யோ.1:7. பாவத்திலிருந்து விடுதலை தருவார் வெளி.1:5. அவர் பஸ்கா ஆட்டுக்குட்டி 1கொரி.5:7. பாவ மன்னிப்புக்கென்று அனேகருக்காகத் தமது இரத்தத்தை ஊற்றியவர் மத்.26:28.

தேவ மகிமையின் பிரகாசமும், தன்மையின் சொரூபமுமாயிருக்கிறார் எபி.1:3. தேவனுடைய ரூபம் பிலி.2:6. அதரிசனமான தேவனுடைய தற்சுரூபம் கொலோ.1:15. சகல பரிபூரணமும் அவருக்குள் வாசமாயிருக்கிறது கொலோ.1:19. அவர் தேவன் யோவா. 1:1; சர்வத்திற்கும் மேலான தேவன் ரோம.9:5.

அவர் ஜீவாதிபதி அப்.3:15. எல்லாம் அவராலும் அவருக்காகவும் சிருஷ்டிக்கப்பட்டன கொலோ.1:16. சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவர் எபி.1:3. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது கொலோ.1:17. அவர் அல்பாவும், ஓமேகாவும், ஆதியும், அந்தமும், முந்தினவரும், பிந்தினவருமாயிருக்கிறார் வெளி.22:13.

உயர்தலங்களுக்கு உயர்த்தப்பட்டார் பிலி.2:9. ஆயினும் அருகிலிருக்கிறார் பிலி.4:5. அவரது ஜனங்களில் வாசம் பண்ணுகிறார் கொலோ.1:27.

அவர் மெய்யான திராட்சச்செடி யோவா.15:1. நித்திய மீட்பின் ஆதாரம் எபி.5:9. ஆதரவுகளுக்கெல்லாம் இருப்பிடம் 2தெச.2:16-17. நம்பிக்கையின் உறைவிடம் 2தெச.1:3. விடா முயற்சியின் ஆதாரம் 2தெச3:5. நீதியின் இருப்பிடம் பிலி.1:11. திரளான சந்தோஷத்திற்கு ஆதாரம் பிலி.1:26. நிறைவிற்கு ஆதாரம் கொலோ.2:10. மகிமையின் ஐசுவரியங்களுக்கு உறைவிடம் பிலி.4:19. மீட்பிற்கும் மன்னிப்பிற்கும் ஆதாரம் கொலோ.1:14. சமாதானத்திற்கும் ஒன்றிணைப்பிற்கும் தேவன் கொலோ.1:20. பரிசுத்தப் படுத்துகிறவர் 1கொரி.1:2. வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களை

இளைப்பாறுதல் தரும்படி தம்மிடம் அழைக்கிறவர் மத்.11:28. அவரோடுள்ள ஐக்கியத்தை நாம் அனுபவிக்கும்படி அழைக்கிறவர் வெளி.3:20.

அவர் தாவீதின் குமாரன் மத்.15:22. அதோடு அவர் மனுஷ குமாரன் மத்.16:27. சோதிக்கப் படுகிறவர்களுக்கு உதவி செய்கிற இரக்கமும், உத்தமமுமான பிரதான ஆசாரியர் எபி.2:17-18. அவர் தம்மைத் தாழ்த்தி நம்மைப் போல மனிதனானார் பிலி.2:7-8. நமது பெல வீனங்களில் நமக்காகப் பரிதாபப் படுகிறார் எபி.4:15.

தேவனுடைய வீட்டிலெங்கும் உண்மையுள்ள குமாரன் எபி.3:6. அவரே அஸ்திபாரம் 1கொரி.3:11. ஜீவனுள்ள கல் 1பேது.2:4. தெரிந்தெடுக்கப்பட்ட விலையேறப் பெற்ற மூலைக்கல் 1பேது.2:6.

அவர் தேவனுடைய வார்த்தை வெளி.19:13. அவரிடம் நித்திய ஜீவ வார்த்தை உண்டு யோவா.6:68. அவர் ஒரு போதகர் யோவா.3:2. அவருடைய வார்த்தைகள் ஆவியும் ஜீவனுமாயிருக்கின்றன யோவா.6:63. அவர் தேவனுடைய இரகசியம். அவருக்குள் ஞானம், அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது கொலோ.2:2-3.

அவர் கிருபையிலும் சத்தியத்திலும் நிறைந்தவர் யோவா.1:14. அளவுக் கடங்கா பொறுமையுள்ளவர் 1தீமோ.1:16. அவர் சாந்தமும் மனத்தாழ்மையுமுள்ளவர் மத்.11:29. அவருடைய அன்பு அளவற்ற அகலமும், நீளமும், உயரமும் ஆழமுமானது எபே.3:18. வியாதியஸ்தர் மேல் மனதுருக்கமுள்ளவர் மாற்.1:41. விசனப்படுகிறவர் லூக்.7:13. பசியுற்றவர் மத்.15:32. உதவியற்றவர் மத்.9:36, மற்றும் கைவிடப்பட்டவர் அப்.3:14. அவர் இன்றும் உண்மையும் சத்தியமுமுள்ளவர் வெளி.19:11.

அவர் பரிபூரண வாழ்வை அருளுகிறவர் யோவா.10:10. அவரது சந்தோஷம் நம்மில் இருக்க விரும்புகிறார் யோவா.15:11 பரிசுத்த ஆவியால் ஸ்நானப்படுத்துகிறார் மத்.3:11. அவர் குணமாக்குகிறவர் மத்.4:23. அவர் விடுதலை செய்கிறார் யோ.8:36. நமது பலவீனங்களையும் வியாதிகளையும் ஏற்றுக் கொண்டு சுமக்கிறார் மத்.8:17. அற்புதங்களைச் செய்கிறார் மத்.13:54. பிள்ளைகளை நேசித்து ஆசீர்வதிக்கிறார் மத்.19:14. சமாதானமும் தருகிறார் யோவா.14:27. பலப்படுத்துகிறார் பிலி.4:13. வல்லமை தருகிறார் கொலோ.1:29. நமக்காகப் பரிந்து பேசுகிறார் எபி.7:25. நமக்கு ஒரு சுதந்தரத்தைத் தருகிறார் கொலோ.3:24.

அவரே மணவாளன் மத்.9:15 அவருடைய மகிமையைப் பார்க்கும் படியாக அவரோடிருக்க விரும்புகிறார் யோவா.17:24. நமது ஆசீர்வாதமான நம்பிக்கை தீத்து 2:13. அவருக்காக வாஞ்சையோடு காத்திருக்கும் மக்களுக்காக வரப்போகிறார் எபி.9:28. தமது பிதாவின் மகிமையோடும் தமது தூதர்களோடு திரும்ப வருவார் மத்.16:27. அவர் மேகங்களுடன் வருவதை எல்லாக் கண்களும் காணும் வெளி.1:7.

அவரது நாமம் இயேசு ஏனென்றால் அவர் தமது ஜனத்தை அவர்களது பாவங்களிலிருந்து மீட்டு இரட்சிப்பார் மத்.1:21. அவரது நாமம் எல்லாவற்றிற்கும் மேலான நாமம் பிலி.2:9. அவரது நாமமேயல்லாமல் வேறு எந்த நாமத்திலும் இரட்சிப்பு இல்லை அப்.4:12. அவர் உலக இரட்சகர் யோவா.4:42. அவர் முற்றிலும் இரட்சிக்க வல்லவர் எபி.7:25. அவர் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் வந்தார் லூக்.19:10. பாவிகளை மனந்திரும்ப அழைக்க வந்தார் மத்.9:13. அவர் ஊழியம் செய்யவும் அனேகரை மீட்கும் படியாகத் தமது ஜீவனைக் கொடுக்கும் படியாகவும் வந்தார் மத்.20:28. நாம் பாவிகளாயிருந்த போது நமக்காக மரித்தார் ரோமர் 5:8. அவர் நல்ல மேய்ப்பர், ஆடுகளாகிய நமக்காக ஜீவனைக் கொடுத்தார் யோவா.10:14-15 நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து நம்மை மீட்பதற்காக, நமக்காக சாபமானார் கலா.3:13. தேவனுக்கும் மனிதனுக்குமிடையில் மத்தியஸ்தர் ஆனார் 1தீமோ.2:5. நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறார் 1யோ.2:1.

அவர் உலகத்தை ஜெயித்தவர் யோவா.16:33. அவர் நமது வெற்றிக்குக் காரணர் 1கொரி.15:57. அவர், விசுவாசமுள்ளவர்களாயிருக்கும்படி நம்மை உற்சாகப்படுத்துகிறார் மாற்.9:23. திடமனதாயிருக்கவும் யோவா.16:33 பயப்படாதிருக்கவும் மாற்.5:36 அவர் நம்மை திடப்படுத்துகிறார். அவரே விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிறார் எபி.12:2. கடைசி வரை நிலைநிறுத்துகிறார் 1கொரி.1:8. அவர் நமது மேய்ப்பரும் ஆத்துமாவின் கண்காணியுமானவர் 1பேது.2:25.

அவர் குருசிலறையுண்டு, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தார் 1கொரி. 15:3-4. அவர் பரத்துக்கு ஏறினார் அப்.1:9. அவரே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறார் யோவா.11:25. மரித்தோரிலிருந்து எழுந்து முதற் பலனானவர் வெளி.1:5.

அவர் இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமானவர் வெளி. 19:16. பூமியின் ராஜாக்களை ஆளுகிறவர் வெளி.1:5. அவர் எல்லாவற் றையும் தமது கட்டுக்குள் கொண்டு வரக் கூடியவர். நமது தாழ்மையான சரீரங்களை அவரது மகிமையின் சாயலுக்கு ஒப்பாக மாற்றக் கூடியவர் பிலி.3:21. இயற்கையின் மேல் அவருக்கு அதிகாரமுண்டு மத்.8:27. பாவங்களை மன்னிக்க அதிகாரம் அவருக்குண்டு மத்.9:2. பரலோகிலும் பூவிலும் சகல அதிகாரமும் உடையவர் மத்.28:18. எல்லாம் அவருடைய கரத்திலிருக்கின்றன யோவா.3:35. அவர் மனிதருக்கெல்லாம் தலையானவர் 1கொரி.11:3. சபையின் தலைவர் எபே.5:23. எல்லா வல்லமைக்கும் அதிகாரத்துக்கும் தலையானவர் கொலோ.2:15. பிசாசின் செயல்களை அழித்தவர் 1யோ.3:8. மரணத்தை அழித்து, ஜீவனையும் அழியாமையையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தவர் 2தீமோ.1:10. உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தவர்களுக்கும் ஆண்டவர் ரோ.14:9. தேவனுடைய வல்லமையும் ஞானமுமாயிருக்கிறார் 1கொரி.1:24. எல்லாம் அவருக்குள் அடங்கி யிருக்கிறது கொலோ.1:18.

கிறிஸ்துவுக்கு நமது பதில்

எத்தகைய இரட்சகர்! அவரை நாம் முற்றிலும் நம்பலாம்! அவர் எல்லாவற்றிற்கும் போதுமானவர். நம்மையும் நமது சூழல்களையும் அவரிடம் ஒப்படைத்தால் போதும். அவரது வல்லமை, அன்பு, ஐசுவரியம் ஆகியவற்றிற்கு எல்கையில்லை. இப்படிப்பட்ட மகத்தான அன்பின் இரட்சகர் மீது நாம் முழு நம்பிக்கையை வைப்பது சரியே.

நமது வாழ்வின் முழுமையான பக்திக்கும் அவர் தகுதியானவர். எனவே நமது எண்ணங்களையும், கண்களையும் இருதயங்களையும் இன்னும் அதிகமாக அவருக்கு நேராகத் திருப்புவோம். இன்னும் அதிகமாக அவரை அறியவும் அதிக உத்தமமாக அவரை நேசிக்கவும் முயற்சிப்போம் எபே.6:24. அவரோடு அதிக நேரத்தைச் செலவு பண்ணுவோம் லூக்.10:39. அவர் சொல்லுவதை கவனிப்போம் மத்.17:5. அவரைப் பின்பற்றுவோம் மத்.10:38. அவருக்குக் கீழ்ப்படிவோம் மத்.28:20. அவரைப் போல நடப்போம் பிலி.2:5. அவரில் நிலைத்திருப்போம் யோவா. 15:5. அவரை கனம் பண்ணுவோம் எபே.5:21. அவரை சேவிப்போம் கொலோ.3:24. அவருக்காக பாடுபடுவோம் பிலி.1:29. அவருக்கு முன்பாகப் பணிவோம் பிலி.2:10. அவரில் உறுதியாய் நிற்போம் பிலி.4:1. அவரில் மகிழ்ந்து களிகூருவோம் பிலி.4:4. அவரில் நடப்போம் கொலோ.2:6. அவருக்காக உழைப்போம் 1கொரி. 15:58. அவருக்காகக் காத்திருப்போம் 1தெச.1:10. அவரில் இணைந்திருப்போம் ரோ.6:4-5. அவரில் அணிவிக்கப்படுவோம் ரோ.13:14. வேரூன்றி அவரில் கட்டப்படுவோம் கொலோ.2:7. அவரது சமாதானம் நம்மில் ஆளட்டும் கொலோ. 3:15. அவருடைய வார்த்தை நம்மில் அதிகமாக தங்கியிருக்கட்டும் கொலோ. 3:16 அவரது நாமத்தில் ஜெபிப்போம் யோவா.14:13. எல்லாவற்றையும் அவரது நாமத்தில் செய்வோம் கொலோ.3:17. அவரைப் பிரியப்படுத்துவோம் கொலோ.3:20. அவரில் வாழுவோம் கொலோ.2:6. அவருக்காகவே வாழுவோம் பிலி.1:21.

இயேசு ஒருவரே உங்களை அறிகிறவர், அது போதும், உங்கள் வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும் அவர் பார்க்கிறார், அவர் அறிகிறார், அவர் புரிந்து கொள்கிறார் என்ற எண்ணத்துடன் அவரிடம் விட்டு விடுங்கள்

கிறிஸ்து எல்லாரிலும் எல்லாமானவர்

Christ all in all

Thomas Watson 1620-1686

"கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமாயிருக்கிறார்" கொலோ.3:11.

தெய்வீக ஒத்தாசையின் மூலம் கிறிஸ்து எல்லாமானவர். கிறிஸ்தவனின் பெலன் கிறிஸ்துவிலிருக்கிறது. "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே, எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு" பிலி.4:13. ஒரு கிறிஸ்தவன் கடமை செய்யவும், சோதனையை எதிர்க்கவும் எப்படி முடியும்? கிறிஸ்துவின் பெலத்தால் மட்டுமே. கிருபையின் ஒரு தீப்பொறி தீமை நிறைந்த வாழ்வுகள் அடங்கிய கடல் போன்ற உலகில், பாடுகள் அலைபோல் மோதும் வேளையில் எப்படி உதவி செய்ய முடியும்? கிறிஸ்து அந்த தீப்பொறியை தம் கரத்துக்குள் வைத்திருக்கிறார். நரகத்தின் கொர்ச்சிக்கிற சிங்கங்கள் பரிசுத்தவான்களை விழுங்காமலிருப்பது எப்படி? யூதாக் கோத்திரத்தின் சிங்கம் அவர்களைப் பாதுகாத்தார். கிறிஸ்து நமக்குக் கிரீடத்தை அளிப்பவர் மட்டுமல்ல, கேடயமாகவும் இருக்கிறார். நாம் வெற்றி பெறும்போது மலர்மாலை அணிவிப்பவர் மட்டுமல்ல வெற்றி பெற பெலனளிக்கிறார். வெளி.12:11-ன் படி ". . . .ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை (சகோதரர் மேல் குற்றம் சுமத்துகிறவனை) ஜெயித்தார்கள்". கிறிஸ்து கிருபை என்னும் ராஜரீகக் கோட்டையால் நம்மைப் பாதுகாக்கிறார். எனவே அக்கோட்டை உடையாது. பேதுருவினுடைய கேடயம் உராய்ந்து விட்டது. ஆனால் கிறிஸ்து அது உடையவில்லை என்று உறுதிப்படுத்தினார். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்" லூக்.22:32 என்றார். எனவே முற்றிலுமாக அவன் விழுந்து விடவில்லை. அனைத்து பரிசுத்தவான்களின் வெற்றிகளுக்குரிய கிரீடங்களும் கிறிஸ்துவின் தலையில் சூட்டப்பட வேண்டும்.

அவரில் அனைத்து நிறைவுகளும் காணப்படுகின்றன கொலோ. 1:19. ஆத்துமா வாஞ்சிக்கும் அனைத்தும் அவரிடமுண்டு. கிறிஸ்து அலங்கரிக்கும் அழகாகவும், ஐசுவரியவான்களாக்கும் தங்கமும், குணப்படுத்தும் தைலமும், பலப்படுத்தும் அப்பமும், ஆறுதலளிக்கும் திராட்சரசமும், நமக்குக் கிரீடமான இரட்சிப்புமானவர். நாம் ஆபத்தில் இருக்கும் போது அவர் கேடகமாகவும், இருளிலிருக்கும்போது சூரியனாகவுமிருக்கிறார். ஆத்துமாவை அலங்கரிப்பதற்கான யாவும் அவரிடமுண்டு.

கிறிஸ்து நம் அனைவருடைய சிலுவைகளையும் சுத்திகரிக்கிறார். அவை ஆத்தும ஔஷதமாகவோ, பாவத்தை அகற்றவோ, கிருபையைக் கொண்டு வரவோ உதவுகின்றன. அவர் தமது 'வயலின்' கம்பிகளை மீட்டும்போது இசை இனிமை யடைகிறது. அவர் தமது பிள்ளைகளை நெருப்பிலிடும் போது அவர்கள் தங்களிலுள்ள அசுத்தங்களைத் தவிர வேறு எதனையும் இழப்பதில்லை.

கிறிஸ்துவே எல்லாமானால் நீங்களும் அவரை உங்களுக்கு எல்லாமாக்குங்கள்

முதலாவது உங்கள் புரிந்து கொள்ளுதலில் அவரை எல்லாமாக ஆக்குங்கள். கிறிஸ்துவை மட்டுமே அறிந்து கொள்ள ஆவல் கொள்ளுங்கள் 1கொரி.2:2. கிறிஸ்துவை எல்லாவற்றிற்கும் எல்லாமாக ஆக்குவது சிறப்பானது! அனேக காரியங்களை நாம் அறிந்திருந்தாலும் அவற்றிற்குக் கொடுக்க வேண்டிய இடத்தை கொடுங்கள். கிறிஸ்துவுக்கு முதலிடம் கொடுங்கள். இதுவே அறிவில் சிறந்தது. ". . . .விவேகிகளோ அறிவினால் முடிசூட்டப்படுகிறார்கள்" நீதி.14:18. கிறிஸ்துவை அறியாவிட்டால் நாம் நம்மையும் அறிய முடியாது. அவர்தான் நம்மை நமது இதயங்களுக்குள் எடுத்துச் சென்று நமது ஆத்துமாக்களின் பகுதிகளைக் காண்பிக்கிறார். நமது வெறுமை, ஏழ்மை ஆகியவை காண்பிக்கப்படுகின்றன. நமது வெறுமையை நாம் காணுமட்டும் நாம் இரக்கமாகிய தங்கமய எண்ணெயால் நிரப்பப்பட முடியாது. கிறிஸ்துவினாலேயன்றி நாம் தேவனையும் அறிய முடியாது 2கொரி.4:6.

உங்களுடைய விருப்பங்களில் கிறிஸ்துவை எல்லாமாகக் கொள்ளுங்கள். அவரையே வாஞ்சியுங்கள். அவரே எல்லா நன்மைகளின் கூட்டமைப்பாயிருக்கிறார். ". . . .அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்" கொலோ.2:10. கிறிஸ்து கிறிஸ்தவனின் பரிபூரணம். இதை விடக் குறைவானதை ஏன் ஆத்துமா வாஞ்சிக்க வேண்டும்? எப்படி வாஞ்சிக்க முடியும்? கிறிஸ்துவை மட்டும் நேசியுங்கள். அன்பு ஒன்றே மிகச் சிறந்த ஆபரணம். அதையே சிருஷ்டிகள் அவருக்கு அளிக்க வேண்டும். கிறிஸ்துவே எல்லாவற்றிற்கும் எல்லாமானால் எல்லாவற்றையும்விட அவரில் அன்பு கூருங்கள்.

உங்கள் திறமைகளில் அவரே எல்லாமாயிருக்கட்டும். அவரது பெலத்தில் எல்லாவற்றையும் செய்யுங்கள். "கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்" எபே. 6:10. எந்தச் சூழலிலும் உங்கள் பெலத்தோடு நீங்கள் போக வேண்டாம். கிறிஸ்துவின் பெலத்தில் போங்கள். கடமை செய்யவும், பாவத்தை எதிர்க்கவும் சுய பெலத்தோடு செல்லுகிறவர்கள் தோல்வியோடுதான் திரும்புவார்கள். தாவீதைப் போல சத்துருவுக்கு எதிராகச் செல்லுங்கள். "நான் கர்த்தருடைய நாமத்தில் உன்னிடத்தில் வருகிறேன்" என்று கூறி முன்னேறினான். நாமும் கிறிஸ்துவின் நாமத்தில் என்று எதிராகச் சென்றால் கோலியாத் விழுவான். யூதாக் கோத்திரத்தின் சிங்கம் நமக்கு முன்பாகக் கடந்து செல்கிறார்.

ஆறுதலின் ஊற்றான கிறிஸ்து

Christ the fountain of comfort

Octavious Winslow (1808 - 1878)

"நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும் சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம்" 2கொரி.1:3.

தேவன், தனது இருதயத்தில், கிருபையின் உடன்படிக்கையின் படியும், அன்பின் சுவிசேஷத்திலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிலும் தமது ஜனங்களின் துக்கங்களுக்கு தீர்வை அளித்திருக்கிறார். புதிய சோதனைகளோ, துக்கங்களோ, பாதையில் தோன்றி உங்கள் ஆவியை ஒடுக்குவதில்லை. "உமக்கு பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டு பண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது!" சங்.31:19.

தமது ஜனங்களுக்கு ஆண்டவராகிய இயேசு எத்தனை ஆறுதலாயிருக்கிறார்! எல்லா ஆறுதல்களுக்கும் தேவனான அவர் கிறிஸ்து மூலமாகவே வெளிப்படுகிறார். லூக்.2:25-ன்படி அவர் இஸ்ரவேலுக்கு ஆறுதல். கிறிஸ்து நமது ஆறுதலும், தூய ஆவியானவர் நமது தேற்றரவாளனுமாயிருக்கின்றார். அவரது உதடுகளிலிருந்து வெளிவந்த ஆறுதலின் வார்த்தைகள் சீஷர்களை விட்டு அவர் பிரிவதற்கு முந்திய மாலையில் கூறப்பட்டன. "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" யோவா.14:1,2.

பாவத்தின் உணர்விலிருந்து துக்கம் எழும்புகிறதா? கண்டித்து உணர்த்தப்படுவதால் ஏற்படும் பாவ உணர்வால் துக்கம் ஏற்படுகிறதா? அவரது நீதியால் நியாயத்தீர்ப்படைகிறோம். இயேசுவின் வல்லமை பாவத்திலிருந்து விடுதலை தருகிறது. ஏதோ தேவையா? அவர் எல்லாத் தேவைகளையும் சந்திக்கக் கூடியவர். இருதயம் நொறுங்கும்படியான துக்கமா? அவரது உருக்கம் அவரைக் கண்ணீர் விடச் செய்ததே யோவா. 11:35. அவரால் துக்கத்தை ஆற்ற முடியும். அவர் அப்படிச் செய்வார். எதிரியினால் தாக்கப்படுகிறீர்களா? அவர் உன்னைப் பகைவனிடமிருந்து பாதுகாத்து உனக்கு முன்னாலிருக்கும் தடைக்கல்லை உருட்டி விடுவார். உடல்நலப் பிரச்சனையா? அவர் நமது நோய்களை சுமக்கிறவர் மத்.8:17. அவர் தமது கிருபையால் சுகமாக்கலாம் அல்லது, அவரது பிரியத்தின்படி படுக்கையிலே பொறுமையாகவும் சந்தோஷமாகவும் இருக்க முடியும்.

எனவே எல்லாத் தொல்லைகளையும் உடனடியாக அவரிடம்

கொண்டு வாருங்கள். அனைத்து சூழல் களிலும் உடனடியாகவும் திகைப் பின்றியும் அவரிடம் செல்லலாம். நீங்கள் அவரோடு பழகி சமாதானமா யிருக்கவே (யோபு 22:21) இவைகள் அனுப்பப்படுகின்றன. அனேகர் கடின சோதனைகளில்தான் அவரோடு முதல் பழக்கத்தை ஏற்படுத்துகின்றனர். அவர்களது உலக சொகுசுகளை யெல்லாம் உரிந்த பின்புதான் தாங்கள் தேவனை விட்டு விலகி வாழ்ந்ததை உணருகிறார்கள்.

நமது மார்க்க வாழ்வின் பிற் காலங்களில்தான் தேவனுடைய பண்பு களை நாம் அறிந்து கொள்வதோடு அவரது அன்பு, அவரது வார்த்தை ஆகியவற்றை இன்னும் அதிகமாக அறிந்து அவரிடம் ஓடி அவர் மட்டும் அளிக்கும் ஆறுதலைப் பெறலாம். நமது தொல்லைகள் நம்மை அவரோடு மிகவும் நெருக்கமாக்குகின்றன. அவரது வார்த்தை, உபதேசங்கள், வாக்குத்தத் தங்கள், போன்ற யாவுமே நமக்கு ஆறுதலை அளிக்கக் கூடியவை. ஜெபத் தின் மூலமாக அவரது இரக்கத்திற்கு நேராக நம்மை இழுத்து கிறிஸ்துவின் மூலம் அவருடன் ஐக்கியப்படுத்து கிறார். நாம் ஜெபித்ததுமே மன அமைதி யையும் அளவில்லா ஆறுதலையும் இருதயத்தில் பெறுகிறோம். ஜெபத்தின் மூலம் பாரங்களைக் கட்டவிழ்த்து, மேகங்களை அகற்றி, அவருக்கு வெளியே யுள்ள அனைத்து ஆறுதல்களையும் அகற்றி விடுகிறார். சபைக்கு அவர் கூறுவதை ஓசி.2:14-ல் படிக்கலாம். "ஆயினும் இதோ நான் அவளுக்கு நயங் காட்டி, வனாந்தரத்தில் அழைத்துக் கொண்டு போய், அவளோடே பட்ச மாய்ப் பேசி....".பிரிவாகிய வனாந்தரம், தனிமை என்ற தொல்லை வாட்டுகிறதா? அவர் அருளும் ஆறுதல் நிச்சயமாக உங் கள் உள்ளத்தில் புகுந்து அவரை 'ஆறுத லின் தேவனாக' நமக்கு காண்பிக்கும்.

இப்படிப்பட்ட கிறிஸ்து நமது இரட்சகராகவும் நண்பராகவும், அதிபதி யாகவும், பரத்தில் நமக்காக மன்றாடு கிறவராகவுமிருக்கிறார். எனவே கவலையேயில்லை. மற்றவர்கள் உங்களை அறியாவிட்டாலும் இயேசு உங்களை அறிவார். உலகம், பரிசுத்தர் கள், நண்பர்கள் போன்றவர்கள் தங்கள் அபிப்பிராயங் களைக் கூறலாம் அல்லது குற்றப்படுத் தலாம். ஆனால் இயேசு ஒருவரே உங்களை அறிகிறவர், அது போதும், எனவே உங்கள் வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும் அவர் பார்க்கிறார், அவர் அறிகிறார், அவர் புரிந்து கொள்கிறார் என்ற எண்ணத் துடன் அவரிடம் விட்டு விடுங்கள்.

கிறிஸ்து எனது தனிப்பட்ட பலவீனங்கள், இரகசிய துக்கங்கள், பெரிய சோதனைகள், கவலைகள் எல்லாவற்றையும் அவர் காண்கிறார் என்று நான் உணர்ந்தால் மனிதரோ, தூதரோ கொடுக்க முடியாத ஆறுதலைப் பெறுவீர்கள். நமது கிறிஸ்து எப்படிப்பட்டவர்! நாம் அவரை நேசிக்க வேண்டாமா? நம்ப வேண்டாமா? சேவிக்க வேண்டாமா? அவருக்காக தெரிவைப்பட்டால் பாடுபடவும் மரிக்கவும் ஆயத்தமாயிருக்க வேண்டாமா!

கிறிஸ்து நமது தைரியம்

Christ our courage

Crawford Loritts

இயேசு தாம் சிலுவையிலறை யப்படுவதற்கு முன்னால் தமது சீஷர் களைக் கூட்டி அவரது மரணம் உயிர்த் தெழுதல் ஆகியவற்றிற்குப் பின்பு அவர்கள் எப்படி வாழ்வது ஊழியம் செய்வது என்று ஆயத்தம் செய்யவும் தைரியப்படுத்தவும் கூறிய வசனங்களை யோ.13-16 அதிகாரங்களில் வாசிக்கிறோம். அவர்தாம் ஜீவனளிக்கும் ஆதாரம் என்றும் கனி கொடுக்க ஏதுவானவர் என்றும் குறிப்பிட்டார். வாழவும் செழிப்படையவும் அவர்கள் செடியில் (கிறிஸ்து) நிலைத் திருப்பது அவசியம், இதை விட்டால் வேறு வழியில்லை. ஆகவே "நான் திராட்சச்செடி, நீங்கள் கொடிகள் ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது" யோவா.15:5 என்று கூறினார். கிறிஸ்தவ வாழ்வில் கிறிஸ்துவே நமக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமானவர்.

விசுவாசம் என்பது நமது வாழ் வில் சகலவல்லவரான இரட்சகரை முற்றிலும் சார்ந்திருப்பதின் வெளிப் பாடு என்று கூறலாம். அவர் கைவிடா தவர். இன்னொரு விதமாகக் கூறினால் நமது விசுவாசம் உயிருள்ள வெற்றியின் விசுவாசம். ஏனெனில் அது ஜீவனுள்ள கிறிஸ்துவில் அடங்கியிருக்கிறது. நமது விசுவாசத்தின் பெலன் அல்ல இரட்ச கரின் வல்லமையே ஒவ்வொரு நாளும் நம்மைப் பாதுகாக்கிறது. நமது யாத்திரை நிச்சயமற்றதும் முன் அறியக் கூடாதது மாயிருக்கலாம். ஆனால் நமது இரட்சகர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் எபி.13:8. அவர் எல்லாவற்றையும் கட்டுக்குள் வைக்கிறவர், எனவே எதிலும் ஆச்சரியமடைவதில்லை. நாம் அவரது வல்லமையுள்ள புயங்களுக்குள் அடங்கி யிருந்து அவரில் இளைப்பாறலாம்.

நாம் எப்போதும் கிறிஸ்துவில் இளைப்பாறி அவரில் நம்பிக்கை வைத்து அவரைச் சார்ந்து அவருக்கு நேராகத் திரும்ப வேண்டும். இதை நாம் கடைப் பிடிக்காவிடில் கிறிஸ்தவ வாழ்வும் விசுவாசமும் தத்தளித்து மூழ்கும் நிலை ஏற்படும்.

நமது வாழ்வுக்கும் விசுவாசத் திற்கும் மையமானவர் இயேசு கிறிஸ்து வாகிய நமது இரட்சகர். அவரே நமது வாஞ்சையும் தூண்டுதலுமாயிருந்து நம்மை விசுவாசத்தில் முன்னேறச் செய்கிறார் எபி.12:1-3. நாமோ நாம் விரும்பியதைப் பெற இயேசுவை நாடுவதில்லை. நமக்காக அவர் சேமித்து வைத்திருப்பவைகளையும் நம்மூலம் அவர் செய்ய விரும்புகிறவைகளையும் அனுபவிக்க அவரிடம் நம்மை அர்ப் பணிக்க வேண்டும். அவரைப் பின் செல்லும் போது இடைவெளிகளையும், பொருந்தாதவைகளையும், குறைவு களையும் அவர் சந்திக்கச் செய்கிறார். அதன் மூலம் அவர் இடைவெளிகளை நிரப்பி, பொருத்த மற்றவைகளை இணைத்து குறைகளை நிறைவாக்கு கிறவர் என அறிய முடியும்.

நமது ஓப்படைப்பின் ஆழமும், நமது விசுவாசத்தின் ஐசுவரியமும் துடிப்பும் தொடர்புடையவை. இயேசு வின் மேலுள்ள நமது பக்தி முழுமையா யிருக்க வேண்டும். ஒளியில் நாம் நடக்க ஆரம்பிக்கும் போது தூய ஆவியானவர் நாம் இன்னும் அர்ப்பணிக்க வேண்டிய பகுதிகளை நமக்குக் காண்பிப்பார். ஆனால் இதய பூர்வமான ஒப்படைப் பும் கிறிஸ்துவுக்கும் அவரது வார்த்தைக் கும் நமது கீழ்ப்படிதலும் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும். நாம் இயேசுவை வாஞ்சித்து அவரைத் தொடருகிற வர்கள். இயேசுவுக்கு நேராக மட்டும் முன்னேறிச் செல்ல தீர்மானம் பண்ணின வர்கள். ஆனால் அடிக்கடி கீழ்ப்படியா மைக்குச் சாக்குப் போக்கு சொல்வதை யும் மனந்திரும்புதலை தேவனுடைய ஈவாக எடுத்துக் கொள்வதையும் வழக்க மாக்கிக் கொள்கிறோம். இதனால் இரட்சகரின் சித்தம் நம் வாழ்வில் நடைபெறாமலிருக்கிறது.

லவோதிக்கேயா சபைக்கு இயேசு கொடுத்த செய்தி வெளி.3:15-16 வசனங்களில் காணப்படுகிறது, வாசிக்க.

ஏன் இந்த கடின வார்த்தைகள்? இயேசு இவ்வுலகில் வந்து மரித்தது அவரோடுள்ள நமது உறவை துண்டிப் பதற்காக அல்ல. அவருக்கு நமது வாழ்வைக் குறித்த ஒரு திட்டமுண்டு. எனவே நாம் அவரோடு தொடர்புடனிருந்தால் அவரைப் பின்பற்ற அர்ப்பணித்து சந்தோஷ மாகவும் சுயாதீனமாகவும் நம்மை அவருக்கு அளித்து அவர் சொற்படி நடக்க சம்மதிப்பது அவசியம்.

இயேசுவின் சாயல்

அந்தத் தெரிந்தெடுப்பும், அர்ப் பணமும் விசுவாசத்தை வளரச் செய்து நமது வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கத் தால் நம்மிடம் வருபவர்கள் பயனடைய முடியும். காரணம் நாம் இயேசுவைப் பின்பற்றுவதால் அவரது சாயலில் வளரு வோம். நாம் பார்வையிலும், செயலிலும் நமது இரட்சகரைப் போலிருப்போம் ரோமர் 8:29. இயேசு தமது வாழ்வை நம்மில் வாழ்கிறார். அது ஒரு ஆச்சரிய மான உண்மை. தேவன் தமது குமாரனின் சுயசரிதையாக நாம் வாழ விரும்புகிறார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு நான் அட்லான்டாவிலிருந்து சின்சினாட்டி என்ற இடத்திற்கு விமானத்தில் சென்ற போது எனக்கு அருகில் உட்கார்ந் திருந்த பெண் மிகுந்த கவலையுட னிருப்பதைக் கவனித்தேன். அவளிடம் சம்பாஷித்த போது அவளது வாழ்வு விழுந்து போவதாகக் குறிப்பிட்டாள். அவளது கேடான தெரிந்து கொள்ளு தலால் திருமண வாழ்வு முடிந்து

போவதாயிருந்தது. எனவே எதிர் காலமே இல்லை என்று எண்ணினாள். அவளோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொண்டு தேவனுடைய வாக்குத்தத் தங்களை எடுத்துக் கூறினேன். அவளில் சிறிய மாற்றம் ஏற்பட்டதை கவனித்தேன்.

விமானம் தரையிறங்கியதும் நான் விடை பெற்றுக் கொண்டு என் பொருட்களை எடுக்குமிடத்திற்குச் சென்றேன். அப்போது அவள் திடீரென என்னிடம் நீங்கள் இயேசுவா? என்று கேட்டாள். ஒரு வினாடி திகைத்து நின்றேன். இறுதியாக நான் இயேசு வல்ல, ஆனால் அவரை அறிவேன். எல்லா மக்களைப் போல எனக்கும் அவர் தேவை என்றேன்.

நான் கடந்து சென்ற போது ஒரு விவரிக்க முடியாத பொறுப்புணர்வும், எண்ணிப் பார்க்கும் உணர்வும் ஏற்பட்டது. நானல்ல கிறிஸ்துவே என்னில் வெளிப்பட வேண்டும். எனது பெலனால் நான் இதை சாதிக்க முடியாது. விசுவாசத்தின் மூலமாக மட்டுமே கிறிஸ்துவைப் போல நாம் ஆக முடியும். கொலோ.2:6-ன் படி ". . . இயேசுவை ஏற்றுக் கொண்டபடியே அவருக்குள் வேர் கொண்டவர்களாக, அவருக்குள் நடவுங்கள்" என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும். நாம் கிறிஸ்துவை விசுவாசத்தினால் ஏற்றுக் கொண்டோம். அவரை விசுவாசத்தினால் அனுபவமாக்குகிறோம். அப்படிச் செய்யும் போது கிறிஸ்துவின் வல்லமையும் நபரத்துவமும் நம்மிலும் நம் மூலமாகவும் விசுவாசத்தால் வெளிப்படும்.

எல்லாப் பாவங்களையும் கழுவி சுத்தப்படுத்தும் அவரது இரத்தமாகிய ஆழ்கடலில் அவற்றைப் போடுங்கள்

Cast them into the deep Ocean of His All Cleansing Blood

Henry Law (1797 - 1884)

பிதாவே, உமது நன்மை, இரக்கம் ஆகியவை என்றென்றும் நிலைத் திருப்பதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

உமது அருமைக் குமாரனாகிய இரட்சகர் ஒவ்வொரு நாளும் அதிகமாக எங்கள் இருதயங்களில் வெளிப்படுத் தப்படட்டும். அவரது மேலான அன்பை அறிந்து கொள்ள ஆசிக்கிறோம். அதன் ஆழமும், நீளமும், உயரமும், அகலமும் அளவிட முடியாதது.

நாங்கள் மகிமையின் மேல் மகிமையடைந்து அவரது சாயலை அடையுமட்டும் குருசிலறையப்பட்ட அவரை விசுவாசக் கண்களால் அதிகம் அதிகமாக நோக்கிப் பார்க்க உதவி செய்யும்.

அவரது சிலுவையின் மூலம் பாவம் எவ்வளவு தந்திரமானதும் கொடியதும் என்பதை நாங்கள் கற்றுக் கொள்ளட்டும். நமக்குப் பதிலாக அவர் ஏற்றுக் கொண்ட அளவுக்கடங்காத பாடுகளையும் நாம் உணரக் கூடும். நமது வாழ்வில் ஒவ்வொரு நிமிடமும் செய்த பாவங்களைக் கொண்டு வந்து சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் அவரது இரத்தமாகிய ஆழ்கடலில் போட்டு விட வேண்டும்.

அன்புள்ள இயேசுவே, உமது வழியாகவே நாங்கள் பிதாவிடம் செல்ல முடியும். உமது மூலமாக நாங்கள் அவரைக் கிட்டிச் சேருகிறோம். ஆயத்த மாக்கப்பட்ட இந்தப் பாதைக்காக உம்மைப் புகழுகிறோம். உமது சிலுவையிலறையப்பட்ட சரீரத்தால் திரை கிழிக்கப்பட்டதே.

மிகப் பெரிய பிரதான ஆசாரியரே, நீர் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருந்து எங்களுக்காகப் பரிந்து பேசுகிறீர். எங்கள் பாவங்களால் துவண்ட ஜெபங்களை ஏற்றுக் கொண்டு அவற்றை உமது விலையேறிய இரத்தத்தால் கழுகி, உமது நற்பண்புகளாகிய நறுமணத்தால் வாசனையூட்டி அவை அங்கிகரிக்கும் படி செய்கிறீர். உமது காயப்பட்ட கரங்களை எங்கள் மீது நீட்டும். எங்கள் அதிகமான தேவைகளில் எங்களை கண்ணோக்கி காத்திருக்கும் எங்கள் ஆத்துமாக்கள் மீது உமது ஆசீர் வாதங்களை ஊற்றும்.

உமது வசனம் வெற்றியுடன் முன்னேறிச் சென்று இன்னும் வெற்றி பெறட்டும். அதை சம்மட்டிப்போல் பலப்படுத்தி எங்களது கடின இருதயங்களை நொறுங்கச் செய்யும். உமது வல்லமைக்கு மேலானது ஒன்றுமில்லை.

"நீர் கொடுப்பதை விட நன்மையானது ஏதுமில்லை
உமது சத்துவத்தில் நீர் நிகரற்றவரே!
உமது அன்புக்கோ எல்லையில்லை!
உமது கிருபைக்கும் அளவில்லை!
எதுவுமே உம்மால் கூடாதது அல்ல"

உமது வல்லமையை வெளிப் படுத்தும். பாவிகள் மனந்திரும்பட்டும், கெட்ட குமாரர்கள் திரும்பி வரட்டும், புரட்சியாளர்கள் அடங்கட்டும், பின் வாங்கினவர்கள் திரும்பட்டும், சாத்தானுடைய கைதிகள் விடுவிக்கப்படட் டும், குருடர் பார்வையடையட்டும், உடைந்த உள்ளங்கள் இணையட்டும், கவலையுள்ளோர் களிகூரட்டும், சுயநீதியுள்ளவர்களின் வீண்பெருமை அகலட்டும், பொய்யர்கள் அதை விட்டு ஓடட்டும், அறிவீனர் அறிவடையட்டும், பரிசுத்த வான்கள் தங்கள் விசுவாசத்தில் கட்டி எழுப்பப்பட்டு நித்திய வாழ்வைப் பெறட்டும்.

எங்கள் மகா அற்புத தேவனே, உம்மிடம் பெரிய காரியங்களைக் கேட்கிறோம். இவைகள் யாவையும் மகிமை நிறைந்த சர்வ வல்ல இரட்சகரும் உமது சொந்தக் குமாரனுமாகிய இயேசு கிறிஸ்து என்னும் எங்கள் மத்தியஸ்தரும் மீட்பருமாகிய அவர் பெயரில் வேண்டுகிறோம்.

கர்த்தர் சமீபமாயிருக்கிறார்

The Lord is at Hand

Horatius Bonar 1808-1889

கர்த்தருடைய வருகை சமீபம் என்றதும் நான் எனது கரத்தில் அசாதாரணமான ஒரு பட்டயத்தைப் பிடிக்கிற உணர்வு ஏற்படுகிறது. தடுமாறிக் கொண்டிருக்கும் பரிசுத்தவானிடம் அவனுக்கெதிராக யுத்தம் கடினமாயிருக்கும் போது, "சோர்ந்து போகாதே, கர்த்தர் சமீபமாயிருக்கிறார், அவர் சாத்தானை உன் கால்களின் கீழாக நசுக்கிப் போடுவார்" என்று சொல்வேன்.

களைத்துப் போனதும், மாயைகளால் குழம்பிப் போனதுமான நடு இரவு இருளுக்குள் கலங்கி நிற்கும் பரிசுத்தவானிடம், "மகிழ்ச்சியாயிரு, கர்த்தர் சமீபமாயிருக்கிறார், இன்னும் கொஞ்சம் காலத்தில் இவை முடிந்து போகும். நீ நினைப்பதற்கு முன்னால் விடியற்காலம் வரும்" என்று சொல்லுவேன்.

பாடுபடும் பரிசுத்தவானிடம் "அழாதே, கர்த்தர் சமீபமாயிருக்கிறார், உடைந்த இருதயம் கட்டப்படும், துக்கத்தின் கசப்பு மறந்து போகும். ஏனெனில் ஆண்டவரோடு இணைவதால் நித்திய சந்தோஷம் உண்டாகும்" என்பேன்.

தளர்ந்த நடைபோடும் பரிசுத்த வானிடம், "கர்த்தர் சமீபமாயிருக்கிறார். பகலாயிருக்கும் போது எழும்பி வேலை செய். நியாயத்தீர்ப்புக்காகக் காத்திருக்கும்மக்கள் இன்னும் ஆயத்தப்படவில்லை. உன் சுயநலத்தையும் சுகவாழ்வையும் விட்டு விடு" என்பேன்.

பேராசையுள்ள பரிசுத்த வானிடம் "கர்த்தர் வருகிறார், சேர்த்து வைக்க இது காலமல்ல, கடைசி நாட்களுக்காக எதையும் சேமிக்காதே" என்று சொல்வேன்.

மார்ச் மாத உபவாச ஜெபம்

Heart Cry for Holy Spirit Revival

எழுப்புதலுக்காக
இதய கதறல்–2017

(உயிர்மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : 18–03–2017
3-வது சனிக்கிழமை

சமயம் : காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

இடம் : விசுவாசிகளின் ஐக்கிய சபை, ஒட்டன்சத்திரம்

தொடர்பு : பாஸ்டர் Dr.**செல்வின்,** ஒட்டன்சத்திரம்
மொபைல் : 94437 19217

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுதினேன். இராஜ பாளையம் உபவாச ஜெபத்திற்கு பிற்பாடு '**எழுப்புதல் வருகிறது**' (Revival is Coming), "இதோ, சமுத்திரத்திலிருந்து ஒரு மனுஷனுடைய உள்ளங்கை அத்தனைச் சிறிய மேகம் எழும்புகிறது" என்பதை அடியேன் காண்கிறேன் 1இராஜா18:44.

சில தேவனுடைய ஊழியர்கள் பத்திரிகைக்கு காணிக்கைக்கூட அனுப்புவார்கள். ஆனால் அவர்களை உபவாச ஜெபத்திற்காக தொடர்பு கொண்டால் சரியான பதில் கூற மாட்டார்கள். காரணம் சில சபைகள் கிராமங்களில் இருக்கிறது. சபை ஆராதனைக்கே சொற்ப ஜனங்கள் வருகிறார்கள், உபவாச ஜெபம் நடத்துவது எப்படி என்று ஆலோசிக்கிறார்கள்.

இவ்வித சூழ்நிலையில் ஒரு ஊழியரை நாம் தொடர்பு கொள்ளும் போது, அவர் தனது உடன் ஊழியர்களையோ, அல்லது தனது ஐக்கியத்தில் உள்ள தலைமை போதகரையோ தொடர்பு கொண்டு, ஒரு அருமையான நல்ல எண்ணிக்கை உள்ள கூடுகையை (Gathering) ஒழுங்கு செய்து தருகிறார்கள். அவ்விதமாக ஏற்படுத்தப் பட்டதுதான் ஆத்தூர், சேலம் உபவாச ஜெபம். கர்த்தருக்குச் சித்தமானால் அந்த கூடுகையைப் பற்றி அடுத்த மாதம் எழுதுகிறேன்.

இராஜபாளையம் உபவாச ஜெபம் மிக மிக ஆசீர்வாதமாயிருந்தது. நூற்றுக்கு அதிகமான பேர் பங்கு பெற்றதோடு, அதிகமாய் ஆசீர்வதிக்கப் பட்டார்கள், தேவனுக்கே மகிமை.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
WESLEY DEVADASON

தொலைபேசி: 95432 21008
94897 40295
10.00 - 1.00; 2.00 - 6.00

கிறிஸ்தவ வெற்றி வாழ்க்கைக்கு முதல் தேவை தரிசனமும், தாகமும். இவ்விரண்டும் பிறப்பதும், வளர்வதும் ஜெபத்தினாலேயே.
-ஹட்சன் டெய்லர்

பத்திரிகை செய்திகள்

தண்டனையை உறுதி செய்ய இதுவே போதுமானது வருவாய்க்கு மீறி 211 சதவீத சொத்து குவிப்பு நீதிபதிகள் தீர்ப்பு முழு விவரம்

புதுடெல்லி பிப்.15

வருவாய்க்கு மீறி 211 சதவீத சொத்து குவிக்கப்பட்டு இருப்பது ஒன்றே. சசிகலா உள்ளிட்ட 3 பேரின் தண்டனையை உறுதி செய்ய போதுமானது என்று சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறினர்.

நீதிபதி பினாகி சந்திரகோஷ்

சொத்து குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில், மொத்தம் 570 பக்கங்கள் அடங்கிய தீர்ப்பில் வழக்கை விசாரித்த நீதிபதி பினாகி சந்திரகோஷ் தன்னுடைய தீர்ப்பில் கூறியதாவது.

இந்த வழக்கில் மேல்முறையீட்டு மனுக்கள் அனுமதிக்கப்படுகின்றன. இந்த வழக்கில் இறுதி விசாரணை முடிவடைந்த நிலையில் பதில் மனுதாரர் ஜெயலலிதா மரணம் அடைந்ததால் சட்டப்படி அவர் இந்த வழக்கில் இருந்து விலக்கப்படுகிறார். இந்த வழக்கில் ரூ.66 கோடிக்கு வருவாய்க்கு மேல் சொத்து சேர்த்ததாக தனிக்கோர்ட்டு கணக்கீட்டு உள்ளது.

211 சதவீத சொத்து

இதனை கர்நாடக ஐகோர்ட்டு தன்னுடைய தீர்ப்பில் ரூ.2 கோடியே 82 லட்சத்து 36 ஆயிரத்து 812 என்று கணக்கிட்டுள்ளது. இதன் அடிப்படையில் அளவுக்கு மீறிய சொத்து 8.12 சதவீதம் என்று வருகிறது. இந்த கணக்கு தவறானதாகும். இந்த தவறை சரி செய்தாலே வருவாய்க்கு மீறிய சொத்து கணக்கு ரூ.16 கோடியே 32 லட்சத்து 36 ஆயிரத்து 812 என்று வருகிறது. இது 76.7 சதவீதமாகும்.

சுப்ரீம் கோர்ட்டு ஆராய்ந்து பார்த்த சொத்து, வருவாய், செலவு கணக்கின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் வருவாய்க்கு மீறிய சொத்து 35 கோடியே 73 லட்சத்து 4 ஆயிரத்து 6 ரூபாய் வருகிறது. இது 211.09 சதவீதமாகும்.

ஜெயலலிதா விடுப்பு

இந்த கணக்கீடு மட்டுமே இந்த வழக்கில் குற்றவாளிகளுக்கு தண்டனையை உறுதி செய்ய போதுமானது. இதனடிப்படையில் தனிக் கோர்ட்டு மிக சரியாக கணக்கீடு செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது என்று தெரிய வருகிறது. ஆகவே தனிக்கோர்ட்டு வழங்கிய தீர்ப்பு உறுதி செய்யப்படுகிறது.

இந்த வழக்கில் குற்றவாளி 1 (ஜெயலலிதா) மரணம் அடைந்ததால் அவர் விலக்கப்பட்டாலும், மற்ற குற்றவாளிகளான மூவரும் (சசிகலா, சுதாகரன், இளவரசி) தனிக்கோர்ட்டு விதித்த தண்டனைக்கு உரியவர்கள் ஆகிறார்கள். இவர்கள் மூவரும் முதல் குற்றவாளியுடன் கூட்டு சதியில் ஈடுபட்டவர்கள் என்று தெரிய வருகிறது.

தனிக்கோர்ட்டு தீர்ப்பில், ஊழல் தடுப்புப் பிரிவின் கீழ் பொது ஊழியர்கள் மட்டுமின்றி தனி நபர்களும் தண்டிக்கப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது மிகவும் சரியானது.

இந்திய அஞ்சல் துறை

அஞ்சல் துறையின் பல்வேறு சேவைகள்

(தொடர்ச்சி)

விரைவு தபால் கட்டணம்

எடை	லோக்கல்	200 கி.மீ வரை	201-1000 கி.மீ வரை	1001-2000 கி.மீ வரை	2000 கி.மீ மேல்
50கி. வரை	ரூ.15	ரூ.35	ரூ.35	ரூ.35	ரூ.35
51-200 கி.வரை	ரூ.25	ரூ.35	ரூ.40	ரூ.60	ரூ.70
201-500 கி.வரை	ரூ.30	ரூ.50	ரூ.60	ரூ.80	ரூ.90
ஒவ்வொரு கூடுதல் 500 கிராமிற்கு	ரூ.10	ரூ.15	ரூ.30	ரூ.40	ரூ.50

அஞ்சலக ஆயுள் காப்பீடு

1. அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனத்தின் ஊழியர்களுக்காக மட்டும் மத்திய அரசே நேரடியாக நடத்தும் ஓர் நலத்திட்டம்.

2. இதில் தனியார் சேர அனுமதியில்லை.

3. மத்திய அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ் அஞ்சல் துறையினரால் 1884-ம் ஆண்டு முதல் எந்தவித வியாபார நோக்கமும் இன்றி, சிறந்த சேவை புரிந்து வருகிறது.

4. குறைந்த பிரீமியம் - அதிக போனஸ்.

5. முதல் பிரீமியம் செலுத்தி, விண்ணப்பம் முறையாக தலைமை அஞ்சல் துறை தலைவர், சென்னை அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நாளில் இருந்தே ஆயுள் காப்பீடு வசதி.

6. மற்ற எந்த ஒரு இன்சூரன்ஸ்க்கும் இல்லாத தனிச்சிறப்பு றிமிலிக்கான பிரீமியத் தொகை சம்பளப் பட்டியலிலியே (அதாவது Treasury-க்கு அனுப்பப்படும் Main Bill-லேயே) Schedule Recovery ஆக பிடித்தம் செய்யப்படும். பாஸ்புக் மூலமும் அஞ்சலகத்தில் நேரடியாக பிரீமியம் செலுத்தும் வசதியும் உண்டு.

7. இடம் மாறுதல் ஆகிச் செல்லும் போது பிடித்தம் பற்றிய செய்தி LPC எனப்படும் முன் சம்பளச் சான்றிதழ் மூலமாக புதிய அலுவலகத்தில் பிடித்தம் செய்யும் வசதி, ஆதலால் பிரீமியம் பிடித்தம் விட்டுப் போகாது.

தினத்தந்தி

Registered with the Registrar of News Paper For India under R.N.I. 11967/'67
Postal Reg. No. KKI/63/2015-2017
Date of Publication : 27th of Every month
Date of Posting : 27th & 28th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To